# அய்ரோப்பிய அவதானிப்புகள்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

## பாப்பாண்டவரின் விரிவுரையும் விபரீதங்களும்

போப்பாண்டவர் 16ம் பெனடிக்ட் பவரிய பல்கலைக்கழகம் ஒன்றில் ஆற்றிய விரிவுரை சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்றது. ஒரு இடைக்காலப் பேரரசரின் இஸ்லாமிய மதத்திற்கு எதிரான கருத்துக்களை 16ம் பெனடிக்ட் அவருடைய உரையில் எடுத்தாண்டதுதான் இதற்குக் காரணம். ஆச்சரியம் என்னவென்றால், புரளி கிளம்பி இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் 16ம் பெனடிக்ட் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். இது கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் பெரும் சாதனை. பழைய தவறுகளுக்கு கத்தோலிக்க சபை மன்னிப்புத் தெரிவிக்கப் பல நூற்றாண்டுகளாகும்.

நினைவுக்குச் சட்டென்று வரும் உதாரணங்கள்: காலிலேயோ, உலகம் உருண்டைசம்பவம். மற்றது இடைக்கால புனித சண்டையில் கிறிஸ்தவ படைகள் செய்த அட்டூழியங்கள்.

இறைதூதர் முகமது பற்றிய டேனிஷ் கேலிச் சித்திரங்கள் உலகளவில் ஏற்படுத்திய விபரீதங்கள். இந்த விரைமன்னிப்புக்குக் காரணமாக இருக்கலாம். இந்த மன்னிப்புக்கூட பூரணமானதல்ல. இஸ்லாமிய மக்களின் மனதைப் புண்படுத்தியதுக்குத்தான் கேட்கப்பட்டதே தவிர, இடைக்காலப் பேரரசரின் இஸ்லாமிய மதத்தைப் பழி கூறும் வார்த்தைகளுக்கு அல்ல. பைசான்திய பேரரசரின் சிதைந்த எண்ணங்களில் இருந்து போப்பாண்டவர் தன்னை விடுவித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

போப்பாண்டவரின் வியாசத்தை முழுவதுமாகப் படித்துவிட்டு இதனை எழுதுகிறேன். இவருடைய மற்ற எழுத்துக்கள் போலவே இந்தக் கட்டுரையும் எளிமைக்கும் தெளிவுக்கும் உதாரணம் அல்ல. அவதானமாக இறையியல் வாசிப்பவர்கள்கூடத் திணறிப் போகும் பத்திகளும் வசன நடைகளும் நிறையவே உண்டு. நான் தரும் சுருக்கம், போப்பாண்டவரின் இறையியல் நுட்பங்களைச் சிதைத்துவிடக் கூடும். ஆகையினால் சாரத்தைத் தருவதைவிட இந்த உரையில் இழைந்து கிடக்கும் இஸ்லாமிய மறைமுகத் தாக்குதல்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். அதற்கு முன் இந்த சர்ச்சைக்குக் காரணியாக இருந்த 14ம் நூற்றாண்டு பைசான்திய பேரரசர் 2ம் இம்மானுவேல் Palaialogos (1391-1425) சுழல் பற்றிச் சில வார்த்தைகள். இந்த 2ம் இம்மானுவேல் இஸ்லாம் மதம் பற்றிய நிதானமான விடய நோக்குப் பார்வையாளர் அல்ல. இவர் பதவி ஏற்றபோது ஒட்டமான் துருக்கியர்கள் சின்ன ஆசியாவைக் கைப்பற்றிவிட்டார்கள். இஸ்லாமிய ஆக்கிரமிப்பிற்கெதிராக மேற்கு கிறிஸ்தவ நாடுகளுடன் இருந்து எதிர்பார்த்த உதவி 2ம் இம்மானுவலுக்குக் கிடைக்கவில்லை. மானமும் கௌரவமும் இழந்த ஆட்சியின் கடைசிக் காலத்தில் இவருடைய இறுதிப்பணிகளில் ஒன்று ஒட்டமான் துருக்கியர்களுக்கு வரிகட்ட சம்மதித்ததுதான். இந்த இஸ்லாமிய ஆக்கிரமிப்புச் சூழலில்தான் ஒரு பாரசீகருடன் இந்த 2ம் இம்மானுவேல் கிறிஸ்தவ இறைநூல் மற்றும் திருக்குரான் பற்றியும் சமய சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் உரையாடுகிறார். ஒரு திருக்குரான் வசனம்கூட இந்த உரையில் 16ம் பெனடிக்ட் மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார்.

இந்தப் பாண்டித்திய வியாசத்தில் 2ம் இம்மானுவேல் மூன்று தரம் வருகிறார். மூன்று தடவையும் கிறிஸ்துவத்தின் மேன்மையையும் சிறப்பையும் எடுத்துச்

சொல்லவே 16ம் பெனடிக்ட் இவரைப் பயன்படுத்து கிறார். 2ம் இம்மானுவேலுக்கும் பாரசீகருக்கும் நடந்த ஏழாவது உரையாடலின்போதுதான் இஸ்லாமியரின் ஆட்சேபனைக்குரிய கூற்று நேரிடுகிறது. புனிதப் போர் பற்றிப் பேசும்போது பைசாந்திய பேரரசர் இவ்வாறு கூறுகிறார். "முகமது புதிதாக ஏதாவது தந்திருக்கிறார் என்று காண்பியுங்கள். கொடியதும் மனிதத்தன்மை களற்றவைகளைத்தான் காண்கிறேன். அவர் பிரக



டனப்படுத்திய மதம் வாளின்னால்த்தான் பரப்பப் பட்டது?"

16ம் பெனடிக்டின் உரையின் தலைப்பு: 'மதநம் பிக்கை, பகுத்தறிவுச் சிந்தனை, பல்கலைக்கழகம்' இந்த உரையில் இவர் சொல்ல வந்தது இதுதான். பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் அறிவுபூர்வ மான ஆய்வுகளினால் மதநம்பிக்கைகளுக்கு இடைஞ் சல்கள் இல்லை. மாறாக அவை மதங்களின் அடித் தளங்களை ஸ்திரப்படுத்துகின்றன. கிறிஸ்தவத்தின் விசேஷம் ஆரம்ப முதல் தன்னை இந்த அறிவு விசார ணைக்கு உட்படுத்தியதுதான். மேலும் இந்த உரையில் சொன்ன விஷயம்: உண்மையான விசுவாசம் புத்தி பூர்வமான சிந்தனைகள் மூலம்தான் புலப்படும். வன்முறை மூலம் அல்ல. இந்தக் கருத்தை வலியுறுத் தவேதான் 2ம் இம்மானுவேலின் கூற்றை தன்னுடைய உரையில் 16ம் பெனடிக்ட் தேர்ந்தெடுத்தார்.

16ம் பெனடிக்டின் கருத்துப்படி இஸ்லாம் போதிக்கும் கடவுள் வடிவங்களுக்கும் உருவங்களுக்கும் புத்தி பூர்வமான ஆராய்ச்சிக்கும் கட்டுப்பட்டவரல்ல. இந்த உரையில் புதைந்து கிடக்கும் ஆழ்பிரதி (sub-text) இதுதான்: அறிவொளி இயக்கத்தின் பெரும் சாதனை யான சிந்தனை சக்தி இன்னும் இஸ்லாமை வந்தடைய வில்லை. அறிவைக் கொண்டு இஸ்லாமிய மதக் கருத்துக்களை பரிசீலனை செய்யாமல் திருக்குரானை தேவவாக்காக ஏற்றுக் கொண்டமையால் இம்மதத் திற்கு இன்னும் மறுமலர்ச்சி ஏற்படவில்லை. கிறிஸ்தவத்திற்கு நடைபெற்றது போல் இஸ்லாமுக்கும் ஒரு மதச் சீர்திருத்தம் அவசியம் வேண்டும். இதே கருத்தைத்தான் மேற்குலக ஊட கங்கள் பெரும்பாலும் பிரதிபலிக் கின்றன.

போப்பாண்டவரின் உரையில் இரண்டு தப்பான அபிப்பிராயங்கள் உண்டு. சமயம், இறையியல் மற்றும் அறிவொளி இயக்கங்களை உன்னிப் பாகக் கவனிக்கிறவர்களுக்கு இது அறிந்த விசயமே. பலவந்தமாக மதத்தைப் பரப்புவது இஸ்லாமிய ருக்கு மட்டுமுள்ள தனி உரிமை யல்ல. கிறிஸ்தவ திருச்சபை காலனிய காலத்தில் படைப்பலத் துடன் கிறிஸ்துவத்தைப் பரப்பிய சான்றுகள் சரித்திரத்தில் நிறைய உண்டு. "நான் சமாதானத்துடன் வரவில்லை கத்தியுடன் வந்திருக் கிறேன்" என்று யேசுநாதர் கூறிய வசனங்கள் கிறிஸ்தவர்களுடைய புதிய ஒப்பந்தத்தில் உண்டு. மற்றது இஸ்லாம் மதம் அறிவொளி சார்ந்த சிந்தனைகளுக்கு எதிரி என்பது தவறு. அய்ரோப்பிய அறிவொளி இயக்கத்திற்கு இஸ்லாமியக் கருத்து கள் நிறையவே பின்பலம் கொடுத்து வலுவு படிந்திருக்கின்றன. மேற்கு லகப் பார்வையில் எழுதப்பட்ட நூல்களில் இச்செய்திகள் இருட்டடிக்கப்பட்டிருந் தாலும் இந்த விவரங்கள் இப்போது பொதுப் பார்வைக்கு கிட்டி இருக்கின்றன. 12ம் நூற்றாண்டு இஸ்லாமிய அறிவர் Ibn Rushd (Averroes) மூலந்தான் அரிஸ்டாட்

**பல்கலைக்கழகங்களில் நடத்தப் படும் அறிவுபூர்வமான ஆய்வு களினால் மதநம்பிக்கைகளுக்கு இடைஞ்சல்கள் இல்லை. மாறாக அவை மதங்களின் அடித்தளங் களை ஸ்திரப்படுத்துகின்றன. கிறிஸ்தவத்தின் விசேஷம் ஆரம்ப முதல் தன்னை இந்த அறிவு விசார ணைக்கு உட்படுத்தியதுதான்.**

*16ம் பெனடிக்டின் உரையில் இருந்து...*



Nasi al-Din al-Dusi

டிலின் தத்துவங்கள் மேற்கத்தைய வாசகர்களைக் கிட்டியது. 13ம் நூற்றாண்டு வானசாஸ்திர கணித வல்லுனர் Nasir al- Dinal - Tusi எழுந்திராவிட்டால் copernicas புரட்சியே ஏற்பட்டி ருக்காது.

16ம் பெனடிக்ட் மனம் நொந்து மன்னிப்புக் கேட்டதினால் முஸ்லிம்கள் சமாதானமடையப் போவதில்லை. இதற்குக் காரணம் போப்பாண்டவரின் பழைய செயற்பட்டியலே. இந்த 16ம் பெனடிக்ட் ஒரு தொடர்ந்த மத வசைப்பாளர். சில ஆண்டுகளுக்கு முன் பௌத்தமதத்தை 'auto - erotic spirituality' என்றார். சமீபத்தில் யூதர்களைக்கூட சாடி இருக்கிறார். இந்த உரை எழுப்பிய மனவருத்தத்திற்கு மன்னிப்புக் கேட்கும் போது கிறிஸ்துவின் மரணம் பற்றிப் பேசிய இவர், தூய பவுலின் ஒரு வாசகத்தை எடுத்துக் காட்டி சிலுவை யூதர்களுக்கு இடைஞ்சல் என்றார். இது மட்டுமல்ல மே மாதம் Auschwitzஇற்குப் போனபோது யூதர்கள் நாசிகளால் திரட்டி அடைத்து வைக்கப்பட்ட முகாமில் பேசினார். Anti-semitism பற்றி மூச்சே விடவில்லை. யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு ஜேர்மனி மக்கள் சார்பாகவோ அல்லது தன்னுடைய சொந்த சார்பாகவோ மன்னிப்புக் கேட்கவில்லை. நாசிகள் ஒரு கொள்ளைக் கும்பல் என்று அவர்களை மட்டும் தனிமைப்படுத்தி யூத அழிப்புக்கு அவர்கள் மட்டுமே காரணம் என்று மட்டும் கூறினார். மற்றும் துருக்கி நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவ அனுமதிக்குத் தடையாக இருக்கிறார். இத்தடைக்கு இவர் கூறும் பதில் இஸ்லாமியத் துருக்கி அங்கத்துவம் ஐரோப்பிய கிறிஸ்தவ அஸ்திவாரத்துக்கு முட்டுக்கட்டையாய் இருக்கும். 16ம் பெனடிக்ட் கார்டினலாக இருந்தபோது சட்டாம்பிள்ளைத்தனமாக நடந்துகொண்ட காரியங்கள் நிறைய உண்டு. சமீபத்தில் பலருடைய கவனத்தையும் ஈர்த்த பிரசித்தி பெற்ற சம்பவம் சிறீலங்கா கத்தோலிக்க குரு திஸ்ஸ பாலசூரிய அன்னை மேரியை அவமானப்படுத்தி எழுதிவிட்டாரென்று அவரைத் திருச்சபையில் இருந்து விலக்கிவிட எடுத்த முயற்சி.

**முடிவாகச் சில எண்ணங்கள் :**

சல்மான் ருஷ்டி, 11/9 முன் இந்த உரையின் இஸ்லாமியத்தைச் சாரும் வசனங்களை ஒருவருமே பெரிதாக எடுத்திருக்க மாட்டார்கள். ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் ஆற்றிய மனித நடைமுறைக்கு உதவாத வாக்கியங்கள் என்று உதாசீனப்படுத்தி இருக்கக்கூடும். கபடமில்லாத நாட்கள் எப்போதோ செத்துப் போய்விட்டன. ருஷ்டிக்கும் 11/9க்குப் பின்பும் இந்தப் போப்பாண்டவர் கூற்றை ஏதோ இறையியல் சார்ந்த கருத்துக்கள் என்று தனிமைப்படுமத்திப் பார்க்க முடியாது. இந்த வார்த்தைகளை ஆப்கானிஸ்தான், ஈராக், பாலஸ்தீனம், பூஷின் islamofacism மேற்குலகின் இஸ்லாமியப்பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்றவைகளுடன் ஒட்டுச் சேர்த்துப் பார்க்கும்போது போப்பாண்டவரின் கூற்றுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் மதப்படிவார்ப்புகள் (religious stereotype) தெரியவருகின்றன.

16ம் பெனடிக்ட் ஒரு தலைசிறந்த இறையியல் வித்தகர். ஆகையினால், முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் நபி முகம்மதும் non negociable என்று நன்றாகவே போப்பாண்டவருக்குத் தெரியும். இந்த முஸ்லிம்களைப் பாதிக்கும் விஷயத்தைப் பகிரங்கமாகப் பேசியதும் இஸ்லாம் மதத்தைப் புண்படுத்தியதும் போப்பாண்டவரை ஒரு நடுநிலையான சமயப் பார்வையாளர் என்ற தகுதியை இழக்கச் செய்கிறது. அவருடைய பதவிக்குரிய ஆன்மீகப் பலத்தை மட்டுமல்ல, அவருடைய சொந்த அதிகாரத்தையும் கூடப் பாதித்திருக்கிறது. இனி அவரைப் பாரபட்சமற்றவர் என்று பார்ப்பது கொஞ்சம் கஷ்டம். சென்ற நூற்றாண்டில் கிறிஸ்தவர்களும் ஏனைய சமயத்தவர்களும் நவீனத்தின் தாக்கத்தால் சமயங்களிடையே காணப்பட்ட பொதுக் கருத்துகள், ஆன்மீகத் தொடர்புகள், திருப்பிரதிகள் பேசும்போது உண்மைகளுக்கு மதிப்புக் கொடுத்து சமயக் கூட்டுறவையும் ஒன்றிணைந்த மனித குலத்தையும் உருவாக்க முயன்றார்கள். இன்று பின்நவீனத்துவமும் பின்காலனியத்துவமும் பன்மையையும் முரண்பாடுகளையும் முக்கியப்படுத்துகின்றன. நவீனத்தின் முழுமை நோக்கப் பார்வையினால் மறைக்கப்பட்டிருந்த 'மற்றதுகள்' (the others) இப்போது முன்னுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். சமூகங்கள்

சமயங்களிடையே மாறுபட்ட கருத்துக்களும் செய்கைகளும் அதிகரித்து வரும் சிக்கலான குழப்பமான இந்த நூற்றாண்டில் வேற்றுமைகளுக் கூடாகவும் வித்தியாசங்களுக்கூடாகவும் இணக்க முள்ள ஆக்கபூர்வமான தோழமை நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதில்தான் மனிதகுலத்தின் சூட்சம் தங்கியிருக்கின்றது.

இந்தக் கட்டத்தில் 16ம் பெனடிக்டின் உரை திருச்சபையை கிறிஸ்தவத்தின் மகாத்மியத்தைப் பறைசாற்றும் இடைக்காலத்திற்குத் திசைதிருப்பி இருக்கிறார். இது கிறிஸ்தவ திருச்சபை உலகிற்கு தரும் நல்ல சேதி அல்ல.

******

**மறுவாசிப்பு - மறுபரிசீலனை**

கல்விக் கருத்தரங்குகளில் வாசிக்கப்படும் கடினமான கட்டுரைகளைவிட அதிக கவனத்தை ஈர்ப்பவை, இந்த மகாநாடுகளுடன் இணைந்து நடாத்தப்படும் புத்தகக் கண்காட்சிகளாகும். சென்ற தடவை பிலடெல்பியா கருத்தரங்கில் கட்டுக் கட்டாக நூல்களை வாங்கி வந்தேன். Anne Fadiman பதிப்பித்த rereadings. இந்த Fadiman சில எழுத்தாளர்களை அவர்கள் இலக்கியப்பணிக்கு வரக் காரணமாயிருந்த அல்லது அவர்களுடைய தொடக்க காலத்தில் பாதித்த நூலை இப்போது அவர்கள் பிரபலமான பின்





Pico Iyer

மறுவாசிப்புச் செய்யச் சொன்னார். அதன் விளைவு தான் இந்த rereadings. முதல் வாசிப்புக்கும் மறுபரி சீலனைக்கும் இடையே ஏற்பட்ட ரசனைமாற்றங்கள் தனி/பொது வாழ்வில் ஏற்பட்ட சந்தோஷங்கள் சலிப்புகள் அரசியல் ஏமாற்றங்கள் வெற்றிகள் மற்றும் அவர்களுடைய எழுத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பாராட் டுக்கள் பசைவுகள் பற்றிப் பகிரங்கமாக இந்த நூலில் பதிவுசெய்கிறார்கள். இரண்டு இந்தியர்களும் இதில் உண்டு. ஒருவர் நாடோடிகளின் நாடோடி PICO Iyer. மற்றவர் ஆங்கிலக் கவிதை எழுதும் விஷய் சேஷாத் திரி. இந்த நூலை வாசித்தபோது எனக்கொன்று தோன்றியது. இதேபோல் ஒரு நூலைத் தமிழிலும் கொண்டு வரலாம். நமது மூத்த தமிழ் எழுத்தாளர்கள் இலக்கியத் துறைக்கு வருமுன் துணைநின்ற, படித்த, பாதித்த நூலை மறுபடியும் வாசிக்கச் சொல்லலாம்.

அந்த முதல் வாசிப்புக்கும் இன்று அவர்கள் பிரபல மடைந்த நிலைக்கும் இடையே உள்ள இடைவெளியில் அவர்கள் வாழ்வில், இலக்கியத்தில், அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், மலர்ச்சிகள், துக்கங்களை, நினைவு கூரச் சொல்லலாம். இந்தப் பத்தியைப் படிக் கும் பிரசுர உரிமையாளர்கள் இதனை முயற்சித்தால் நல்லது.